**<u>மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் வால்பாறை</u>**

முன்னிலை : திருமதி.என்.மீனாட்சி, பி.ஏ., பி.எல்.,
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், வால்பாறை.
2026 ஆம் வருடம் மார்ச் திங்கள் 25 ஆம் நாள் புதன்கிழமை
குரோதி வருடம் ஐப்பசி மாதம் 13 ஆம் நாள்
ஆண்டுபட்டிகை வழக்கு எண்:19/2025
**வால்பாறை காவல் நிலைய குற்ற எண் : 136/2024**
CNR NO: TNCB150010772025

குற்றமுறையிடுபவர் : அரசுக்காக:- காவல் ஆய்வாளர், வால்பாறை காவல் நிலையம், குற்ற எண்:136/2024

எதிரியின் பெயர் : நஜீப், த/பெ. குஞ்சுமக்கார், தெற்கே தான்கிரில் வடதலஜெட்டி அஞ்சல், அறுாப்புகுட்டி, செருத்தலா, ஆழப்புழா மாவட்டம், கேரளா மாநிலம்.

<table>
<tr><td colspan="7">மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற 07.04.2021 நாளிட்ட R.O.C No. 814/2020 RG/F1 (P.Dis.No.36/2021) உத்தரவின்படி வழக்கின் சுருக்கம் கீழ்கண்டவாறு விவரிக்கப்படுகிறது.</td></tr>
<tr><td>வ. எ ண்</td><td colspan="6">வழக்கின் சுருக்கம்</td></tr>
<tr><td rowspan="2">(i)</td><td rowspan="2">எதிரியின் அடைப்பு காவல் நாட்கள்</td><td rowspan="2">:</td><td colspan="2">எதிரியின் பெயர்</td><td>அடைப்பு காவல் நாள்</td><td>விடுவிப்பு நாள்</td></tr>
<tr><td>1</td><td>நஜீப்</td><td>20.11.2024</td><td>மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வால்பாறை கு.ப.மனு.எண்.198 /2025 நாள்</td></tr>
</table>

MEENATCHI MURUGAN
Digitally signed by MEENATCHI MURUGAN
Date: 2026.04.18 12:32:09 +0530

25.03.2026 DM Cum JM
Valparai

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | 04.02.2025 தேதியிட்ட உத்தரவுபடி எதிரிக்கு முன்பிணை வழங்கப்பட்டுள்ளது. |
| (ii) | புகார் தாக்கல் செய்த நாள் மற்றும் இறுதி அறிக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்த நாள் | : | புகார் தாக்கல் செய்த நாள் | | இறுதி அறிக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்த நாள் | |
| | | | 20.11.2024 | | 11.07.2025 | |
| (iii) | மேல்விசாரணைக்காக வழக்கை அமர்வு நீதிமன்றத்திற்கு அனுப்ப உத்தரவிடப்பட்ட நாள் | : | - | | | |
| (iv) | கு.வி.மு.ச பிரிவு 228, 240, 246 மற்றும் 251–ன் கீழ் எதிரியிடம் கேள்விகள் கேட்ட நாள் | : | 08.09.2025 | | | |
| (v) | அனைத்து பல்வகை மனுக்கள் மற்றும் அதன் முடிவுகள். முடிவுகளை எதிர்த்து மேல்நீதிமன்றத்தில் முறையீடு செய்யப்பட்டிருந்தால் அதன் முடிவுகள். கு.வி.மு.ச பிரிவு 317–ன் கீழான மனுவை தவிர. | : | குற்றவியல் பல்வகை மனு எண் . | | மனு நாள் | முடிவு |
| | | | | | | – |
| (vi) | சாட்சிகள் முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை செய்யப்பட்ட நாள் | : | விசாரணை செய்யப்பட்ட சாட்சிகள் பெயர் | | முதல் விசாரணை செய்யப்பட்ட நாள் | குறுக்கு விசாரணை செய்யப்பட்ட நாள் |
| | | | அ.சா.1 | முருகம்மாள் | 20.01.2026 | 20.01.2026 |

MEENATCHI MURUGAN Digitally signed by MEENATCHI MURUGAN Date: 2026.04.18 12:32:16 +0530

25.03.2026

DM Cum JM
Valparai

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | அ.சா.2 | விக்னேஷ் | 20.01.2026 | 20.01.2026 |
| | | | அ.சா.3 | ராஜேஸ்குமார் | 20.01.2026 | 20.01.2026 |
| | | | அ.சா.4 | முனியாண்டி | 11.02.2026 | 11.02.2026 |
| | | | அ.சா.5 | ரவிக்குமார் | 11.02.2026 | 11.02.2026 |
| | | | அ.சா.6 | சதீஸ்குமார் | 11.02.2026 | 11.02.2026 |
| | | | அ.சா.7 | ராமசந்திரன் | 17.03.2026 | 17.03.2026 |
| (vii) | கு.வி.மு.ச பிரிவு 313–ன் கீழ் எதிரியிடம் விசாரணை செய்யப்பட்ட நாள் | : | 23.03.2026 | | | |
| (viii) | எதிரிகள் தலைமறைவான மற்றும் முன்னிலையான / முன்னிலைபடுத்தப்பட்ட விபரங்கள் | : | - | | | |
| (ix) | மேல்நீதிமன்றத்தில் தடையாணை பெற்றிருந்தால் அதன் முடிவுகள். | : | அமர்வு நீதிமன்ற கு.ப.ம.எண்கள் | உயர்நீதிமன்ற எண் மற்றும் தடையாணை நாள் | முடிவு | |
| | | | - | - | - | |
| (x) | குற்றச்சாட்டு | : | 07.11.2024–ம் தேதி காலை 10.00 மணிக்கு வால்பாறை காவல் நிலைய சரக எல்லைக்குட்பட்ட பாரத் ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா ATM–ல் சென்டரில் சாட்சி 1 முருகம்மாள் என்பவரிடம் எதிரி ATM–ல் பணம் எடுத்து தருவதாக முருகம்மாளின் ATM கார்டை (வங்கி கணக்கு எண்.36554650543) குற்றமுறு மோசடி எண்ணத்துடன் ஏமாற்றி வாங்கி அவரது வங்கி கணக்கில் இருந்து ATM மூலம் ரூ.9000/–ஐ எடுத்துச்சென்றுள்ளதாக எதிரியின் மீது சட்டப்பிரிவு 318 (4) BNS–ன் கீழ் | | | |
| (xi) | எதிரியின் பதில் | : | குற்றவாளி இல்லை, பொய் வழக்கு. | | | |
| (xii) | நீதிபதியின் முடிவு | : | எதிரி மீதான சட்டப்பிரிவு 318 (4) BNS–ன் கீழான | | | |

MEENATCHI MURUGAN Digitally signed by MEENATCHI MURUGAN Date: 2026.04.18 12:32:22 +0530

| | | | |
|---|---|---|---|
| | | | குற்றச்சாட்டை பொறுத்து குற்றவாளி இல்லை என முடிவு. |
| (xiii) | நீதிபதியின் தீர்ப்பு | : | 1. எதிரியை குற்ற சம்பவத்தோடு தொடர்புபடுத்தியோ எதிரிக்கு எதிரான குற்றச்சாட்டை நிரூபணம் செய்யும் வகையிலும், வழக்கு சான்றாவணங்களை உறுதியூட்டும் வகையிலும் அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்கள் இல்லாத நிலையில் அரசு தரப்பில் எதிரிக்கு எதிரான BNSபிரிவு 318(4)–ன் கீழ் உள்ள குற்றச்சாட்டு அரசு தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்படவில்லை என இந்நீதிமன்றம் முடிவு செய்து, சந்தேகத்தின் பலனை எதிரிக்கு வழங்கி எதிரி BNSபிரிவு 318(4)–ன் கீழ் குற்றவாளி இல்லை என முடிவு செய்து, BNSS பிரிவு 271(1)–ன் கீழ் எதிரியை விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பு அளிக்கின்றது.<br><br>2. இவ்வழக்கில் தீர்ப்பின் மீது மேல்முறையீடு செய்யப்பட்டிருந்தால் மேல்முறையீட்டு நீதிமன்றத்தில் ஆஜராவதற்காக பெறப்பட்ட BNSS பிரிவு 481(1) பிணைப்பத்திரமானது இன்றைய தேதியிலிருந்து 6 மாத காலத்திற்கு அமலில் இருக்கும் என்றும் பின்னர் தானாக ரத்தாகிவிடும் என்றும் உத்தரவிடப்படுகிறது.<br><br>3. இவ்வழக்கில் P.R. No.14/2025–(அ.சா.ஆ.11 )– ல் கண்ட அ.சா.பொ.1 43 ATM கார்டுகள் , அ.சா.பொ.2 3 தொப்பிகள், அ.சா.பொ.3 4 மாஸ்க்கள்– வழக்கு சொத்துக்களை மேல் முறையீட்டுக் காலத்திற்கு பின் அழிக்கவும், மற்றும் (அ.சா.ஆ.14)– ல் கண்ட பணம் ரூ.5,290/–யை மேல் முறையீட்டு காலத்திற்கு பின் உரிய உரிமையாளர் மனு செய்து பெற்றுக்கொள்ளுமாறு உத்தரவிடப்படுகிறது. |

இவ்வழக்கானது இதுநாள் வரையில் இந்நீதிமன்ற விசாரணையில் இருந்து 23.03.2026–ம் தேதி இறுதி விசாரணைக்கு வந்தபோது அரசு தரப்பில் திரு. ராமசந்திரன், B.Sc., LLM., அரசு உதவி வழக்கறிஞர், நிலை–1 அவர்களும், எதிரி தரப்பில் வழக்கறிஞர் திரு.M.முத்துசாமி,M.A.,B.L., அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பு வாதங்களை கேட்டும், ஆவணங்களை பரிசீலனை செய்தும், இது நாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்து இறுதியாக இன்று இந்நீதிமன்றம் வழங்கும்...

MEENATCHI MURUGAN

Digitally signed by MEENATCHI MURUGAN
Date: 2026.04.18 12:32:28 +0530

25.03.2026

DM Cum JM
Valparai

**தீர்ப்புரை**

1. கடந்த 07.11.2024–ம் தேதி காலை 10.00 மணிக்கு வால்பாறை காவல் நிலைய சரக எல்லைக்குட்பட்ட பாரத் ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா ATM–ல் சென்டரில் சாட்சி 1 முருகம்மாள் என்பவரிடம் எதிரி ATM–ல் பணம் எடுத்து தருவதாக முருகம்மாளின் ATM கார்டை (வங்கி கணக்கு எண்.36554650543) குற்றமுறு மோசடி எண்ணத்துடன் ஏமாற்றி வாங்கி அவரது வங்கி கணக்கில் இருந்து ATM மூலம் ரூ.9000/–ஐ எடுத்துச்சென்றுள்ளதாக எதிரியின் மீது சட்டப்பிரிவு 318 (4) BNS–ன் படி தண்டிக்கப்படவேண்டிய குற்றம் என்று வால்பாறை உதவி ஆய்வாளர் BNSS பிரிவு 193(3) ன் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2. இறுதி அறிக்கை பரிசீலனைக்கு பின் இந்நீதிமன்றத்தில் எதிரிக்கு எதிராக இவ்வழக்கை கோப்பிற்கு 11.07.2025–ம் தேதி அன்று ஆண்டுபட்டிகை வழக்கு எண் 19/2025 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு, எதிரிக்கு BNSS பிரிவு.227–ன்படி அழைப்பாணை அனுப்பப்பட்டு, எதிரி இந்நீதிமன்றத்தில் முன்னிலையானவுடன் BNSS பிரிவு.230–ன் படி வழக்காவணங்களின் நகல்கள் இலவசமாக வழங்கப்பட்டது.

3. எதிரிக்கு போதிய கால அவகாசம் வழங்கி வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்ததில் எதிரிக்கு எதிராக குற்றச்சாட்டு வனைய, முதற்நோக்கு முகாந்திரம் இருந்ததால் BNSS பிரிவு.263–ன் படி சட்டப்பிரிவு 318 (4) BNS–ன் கீழ் குற்றச்சாட்டு வனைந்து, எதிரிக்கு புரியும்படி தமிழ் மொழியில் குற்றச்சாட்டை படித்துக்காட்டி விளக்கிகூறி வினவியபோது எதிரி தான் குற்றவாளி இல்லை என்று மறுத்து, வழக்கு விசாரணை செய்யப்பட வேண்டும் என கூறினார். எனவே, அரசு தரப்பு சாட்சிகளின் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

4. பின்னர் இந்நீதிமன்றத்தில் அரசுதரப்பு வழக்கை நிரூபிப்பதற்காக அ.சா.1 முதல் அ.சா.7 வரையிலான சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டு, அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.14 வரையிலான சான்றாவணங்களும், அ.சா.பொ.1 மற்றும் அ.சா.பொ.3 சான்று பொருட்களும் குறியீடு செய்யப்பட்டது. எதிரி தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை.

சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

**அரசுத்தரப்பு சாட்சியத்திலிருந்தும், சான்றாவணங்களிலிருந்தும் புலப்படும் அரசு தரப்பு வழக்கின் சுருக்கம் :–**

5. கடந்த 19.11.2024–ம் தேதி உதவி ஆய்வாளர் திரு.கிருஷ்ணமூர்த்தி வால்பாறை காவல் நிலையத்தில் பணியில் இருந்த போது, அ.சா.1 நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்து மூலமான அ.சா.ஆ.1–ஐ பெற்று, நிலைய குற்ற எண்.136/2024, சட்டப்பிரிவு 318(4) BNS–ன் கீழ் அ.சா.ஆ.7 முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். பின்னர் நிலைய காவல் ஆய்வாளர் திரு.ஆனந்தகுமார் வழக்கு கோப்பினை தனது விசாரணைக்கு எடுத்துக்கொண்டு, சம்பவயிடம் சென்று சாட்சிகள் அ.சா.3, அ.சா.4 ஆகியோர் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு அ.சா.ஆ.8 மற்றும் அ.சா.ஆ.9 தயார் செய்துள்ளார். பின்னர் சாட்சிகள் அ.சா.1, அ.சா.2, அ.சா.4, அ.சா.3 ஆகியோரை தனித்தனியே விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்னர் எதிரியை சாட்சிகள் அ.சா.5 மற்றும் அ.சா.6 ஆகியோர் முன்னிலையில் காரணம் கூறி கைது செய்து, அதே சாட்சிகள் முன்னிலையில் ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்பு ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.10–ன் படி மேற்படி சாட்சிகள் முன்னிலையில் எதிரி எடுத்து ஆஜர் செய்த வழக்கு சொத்துக்களான அ.சா.பொ.1 முதல் அ.சா.பொ.3–ஐ அ.சா.ஆ.11 கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றியுள்ளார். பின்னர் எதிரியை நிலையம் அழைத்து வந்து பாரா வசம் ஒப்புவித்து தக்க வழிக்காவலுடன் நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியுள்ளார். தடய பொருட்களான அ.சா.பொ.1 முதல் அ.சா.பொ.3–ஐ அ.சா.ஆ.12 படிவம் 91–ன் மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளார். பின்னர் சாட்சிகள் அ.சா.5 மற்றும் அ.சா.6 ஆகியோர் தனித்தனியே விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த உதவி ஆய்வாளர் திரு.கிருஷ்ணமூர்த்தி–ஐ விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். அ.சா.7 தனது புலன்விசாரணையை முடித்து எதிா மீது சட்டப்பிரிவு 318(4) BNS–ன் படி குற்ற இறுதியறிக்கை தயார் செய்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார். புலன் விசாரணை குறித்த அ.சா.7–ன் சாட்சியத்தோடு அரசு தரப்பு சாட்சிகள் முடிக்கப்பட்டுள்ளது.

MEENATCHI MURUGAN Digitally signed by MEENATCHI MURUGAN Date: 2026.04.18 12:32:42 +0530

25.03.2026 DM Cum JM
Valparai

6. அரசு தரப்பு சாட்சிகள் முடிவடைந்ததும் அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்தும், சான்றாவணங்களிலிருந்தும் எதிரிக்கு பாதகமாக தோன்றிய சாட்சியங்களை குறித்து எதிரியிடம் BNSS பிரிவு 351(1) (b)–ன் கீழ் விசாரணை செய்த போது எதிரி அரசு தரப்பு சாட்சிங்கள் கூறுவது பொய் என்றும், அரசு தரப்பு வழக்கு பொய் வழக்கு என்று தெரிவித்து எதிரி தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை எனவும் தெரிவிக்கப்பட்டது. எதிரி தரப்பில் சாட்சிகள் எதுவும் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் மற்றும் சான்று பொருட்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

**7. இவ்வழக்கில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனை யாதெனில்,**

1. எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள சட்டப்பிரிவுகள் 318(4) BNS–ன் படியான குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் தகுநிலை ஐயப்பாட்டிற்கு இடமில்லாமல் நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதேயாகும்.

**<u>தீர்வு :–</u>**

8. இருதரப்பு வாதத்தை கேட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்து, எதிரி மீதான குற்றச்சாட்டு அரசு தரப்பில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா என ஆராய்கையில்,

கடந்த 07.11.2024–ம் தேதி காலை 10.00 மணிக்கு பாரத் ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா ATM–ல் சென்டரில் அ.சா.1–னிடம் எதிரி ATM–ல் பணம் எடுத்து தருவதாக அ.சா.1–ன் ATM கார்டை (வங்கி கணக்கு எண்.36554650543) குற்றமுறு மோசடி எண்ணத்துடன் ஏமாற்றி வாங்கி அ.சா.1–ன் வங்கி கணக்கில் இருந்து ATM மூலம் ரூ.9000/–ஐ எடுத்துச்சென்றுள்ளதாக எதிரியின் மீது சட்டப்பிரிவு 318 (4) BNS–ன் படி தண்டிக்கத்தக்க குற்றமிழைத்திருப்பதாக அரசு தரப்பில் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

9. அரசு தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர், அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.7 சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.14 வரையிலான சான்றாவணங்களும், அ.சா.பொ.1 முதல் அ.சா.பொ.3 சான்று பொருளும் குறியீடு செய்யப்பட்டும், எதிரி மீதான குற்றச்சாட்டு நிரூபணம் செய்யப்பட்டுள்ளது. எனவே, எதிரிக்கு தக்க தண்டனை வழங்க

வேண்டுமென வாதம் முன்வைத்தார்.

10. எதிரி தரப்பில் வாதிட்ட கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தில், அ.சா.1 பாதிக்கப்பட்ட மற்றும் நிகழ்நிலை புகார்தாரர் ஆவார். இவரது சாட்சியத்தில் தன்னிடம் ATM அட்டையை வாங்கியது யார் என்று பார்த்தால் அடையாளம் சொல்ல இயலாது என்றும், ATM மூலம் பணம் எடுத்தது யார் என்று தெரியாது என்றும் கூறியுள்ளார். கேள்விப்பட்ட சாட்சியான அ.சா.2, அ.சா.1–ன் மகன் ஆவார். பார்வை மகஜர் சாட்சிகளான அ.சா.3 பார்வை மகஜரிலுள்ள கையொப்பத்தை காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்ததாகவும், அ.சா.4 பார்வை மகஜரிலுள்ள கையொப்பம் தன்னுடையது அல்ல என சாட்சியமளித்துள்ளார். ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகஜர் சாட்சிகளான அ.சா.5 மற்றும் அ.சா.6 –ன் சாட்சியம் அரசு தரப்பிற்கு எதிராக உள்ளது. எதிரிக்கும், வழக்கு சம்பவத்திற்கும் சம்பந்தமல்ல. எனவே, எதிரிகளுக்கு எதிரான குற்றச்சாட்டை சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு அரசு தரப்பில் சாட்சிகளின் சாட்சியங்கள் மூலம் நிரூபணம் செய்யவில்லை. எனவே, சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு சாதகமாக்கி எதிரிகளை வழக்கு குற்றச்சாட்டிலிருந்து விடுதலை செய்ய வேண்டும் என வாதம் முன் வைக்கப்பட்டது.

11. பாதிக்கப்பட்ட மற்றும் நிகழ்நிலை புகார்தாரரான அ.சா.1 தனது சாட்சியத்தில், சுமார் ஒரு வருடத்திற்கு முன்பாக தேதி, மாதம் நினைவில்லை. காலை சுமார் 10.00 மணியளவில் வால்பாறையில் உள்ள பாரத் வங்கியில் ATM–ல் பணம் எடுப்பதற்காக சென்றேன். கணக்கில் பாக்கி தொகை சரிபார்ப்பதற்காக அங்கு இருந்த நபரிடம் எனது ATM அட்டையை கொடுத்ததாகவும், அந்த நபர் ATM மிசினை பார்த்து விட்டு பணம் இல்லை என்று கூறி ATM அட்டையை திருப்பி கொடுத்துவிட்டதாகவும், தான் வீட்டிற்கு சென்று விட்டு மாலை 06.00 மணியளவில் நான் குடியிருக்கும் பகுதியில் உள்ள கடையில் எனது ATM அட்டையை கொடுத்து வங்கி கணக்கில் பணம் எவ்வளவு இருக்கும் என்று பார்ப்பதற்காக கொடுத்ததாகவும், அவர் பணம் இல்லை என்று கூறி ATM அட்டையை கொடுத்துவிட்டதாகவும், மறுநாள் நான் வங்கிக்கு சென்று எனது ATM அட்டையை கொடுத்து வங்கி பாக்கி தொகையை பார்ப்பதற்காக கொடுத்த போது, வங்கி ஊழியர் அந்த ATM அட்டை என்னுடைய பெயரில் இல்லை என்றும், வேறு ஒரு நபர் பெயரில் இருப்பதாக தெரிவித்து, தனது வங்கி


MEENATCHI MURUGAN Digitally signed by MEENATCHI MURUGAN
Date: 2026.04.18 12:32:54 +0530

கணக்கில் இருந்து ரூ.9,000/–ம் எடுக்கப்பட்டிருப்பதாக வங்கி ஊழியர் தெரிவித்தார் என்றும், அதன் அடிப்படையில் தான் வால்பாறை காவல் நிலையம் சென்று அ.சா.ஆ.1 புகார் அளித்தேன் என்றும், தனது வங்கி கணக்கில் இருந்து யார் பணம் எடுத்தது என்று தெரியவில்லை. தான் ATM அட்டையை கொடுத்த நபரை பார்த்தால் அடையாளம் சொல்ல இயலாது என்று அரசு தரப்பிற்கு எதிராக பிறழ்சாட்சியமளித்துள்ளார்.

12. கேள்விப்பட்ட சாட்சியாக விசாரிக்கப்பட்டுள்ள அ.சா.2, அ.சா.1–ன் மகன் ஆவார். இவர் தனது சாட்சியத்தில், அ.சா.1 தனக்கு போன் செய்து, தனது வங்கி கணக்கில் பணம் இருப்பதாகவும், அதை ATM மூலம் எடுக்க முடியவில்லை என்று கூறியதாகவும், தான் ATM கார்டை வங்கியில் சென்று விசாரிக்குமாறு கூறினேன். அ.சா.1 எனது அம்மா வங்கியில் சென்று விசாரித்த போது, வங்கி கணக்கில் பணம் எதுவும் இல்லை என்றும், அனைத்து பணமும் எடுக்கப்பட்டுவிட்டனர் என்றும், வேறுயாரிடமாவது பணத்தை கொடுத்தீர்களா என்று கேட்ட போது, அ.சா.1 தனது அம்மா யாரிடமும் கொடுத்ததாக நினைவில்லை என்றும், தான் நாளை வந்து பார்ப்பதாக கூறி, தான் வந்து கேட்ட போது, அ.சா.1 தனது அம்மா ATM கார்டை யாரிடம் கொடுத்தேன் என்று தெரியவில்லை என்று கூறினார் என்று பிறழ்சாட்சியமளித்துள்ளார்.

13. பார்வை மகஜர் சாட்சிகளாக அ.சா.3 மற்றும் அ.சா.4 விசாரிக்கப்பட்டுள்ளார்கள். அ.சா.3 தன் சாட்சியத்தில், அ.சா.ஆ.2 பார்வை மகஜரிலுள்ள 1–வது சாட்சி கையொப்பத்தை தன்னுடையது என ஒப்புக்கொண்டு, கையொப்பத்தை வால்பாறை காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்தேன் என்றும், அ.சா.4 தன் சாட்சியத்தில், பார்வை மகஜரிலுள்ள 2–வது சாட்சி கையொப்பத்தை தன்னுடையது அல்ல என்று அரசு தரப்பு வழக்கிற்கு முரணாக பிறழ்சாட்சியமளித்துள்ளார்கள்.

14. இவ்வழக்கில் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகஜர் சாட்சிகளாக அ.சா.5 மற்றும் அ.சா.6 விசாரிக்கப்பட்டுள்ளார்கள். அ.சா.5 தனது சாட்சியத்தில், அ.சா.ஆ.3 மற்றும் அ.சா.ஆ.4 ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகஜரிலுள்ள 1–வது சாட்சி கையொப்பம் தன்னுடையது என ஒப்புக்கொண்டு, வால்பாறை காவல் நிலைய போலீசார்

தான் வேலை செய்யும் நகைகடையில் விசாரித்து கொண்டிருந்தார்கள் என்றும், அப்போது ATMகார்டு காணாமல் போய்விட்டதாகவும், அதனை அ.சா.1—க்கு ஒருவர் மாற்றி கொடுத்துவிட்டதாக போலீசார் சொன்னதாகவும், மேற்படி பொருட்களை ஒரு நபரிடமிருந்து கைப்பற்றியதாக கூறியதாகவும், அந்த நபர் ஆஜர் எதிரியாவார் என்று சாட்சியமளித்துள்ளார்.

15. மற்றொரு ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகஜர் சாட்சியான அ.சா.6 தனது சாட்சியத்தில், அ.சா.ஆ.5 மற்றும் அ.சா.ஆ.6 ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகஜரிலுள்ள 1—வது சாட்சி கையொப்பம் தன்னுடையது என ஒப்புக்கொண்டு, தான் வேலை செய்யும் கடை அருகே காவல் ஆய்வாளர் கேட்டுக்கொண்டதின் பேரில் கையொப்பம் செய்ததாகவும், போலீசார் என் முன்பாக எந்த பொருளையும் கைப்பற்றவில்லை என்று பிறழ்சாட்சியமளித்துள்ளார்.

16. அரசு தரப்பு வழக்கின் படி, அ.சா.பொ.1 முதல் அ.சா.பொ.3 வரையிலான வழக்கு சொத்துக்களை அ.சா.ஆ.10 ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதியின் படி அ.சா.5 மற்றும் அ.சா.6 முன்னிலையில் எதிரியிடமிருந்து கைப்பற்றியதாக உள்ளது.

17. புலன் விசாரணை அதிகாரியான அ.சா.7 தன் சாட்சியத்தில், அ.சா.பொ.1 முதல் அ.சா.பொ.3 வரையிலான தடய பொருட்களை அ.சா.ஆ.10 ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதிகளின் படி எதிரியிடமிருந்து கைப்பற்றியதாக சாட்சியமளித்துள்ளார்.

18. காவல் துறையினரால் எதிரி கைது செய்யப்பட்ட பிறகு, காவல் துறையின் காவலில் இருக்கும் போது அளிக்கப்பட்ட ஒப்புதல் வாக்குமூலம் பாரதிய சாக் ஷ்ய அதிநியம் பிரிவு 23—ன் கீழ் ஒரு காவல் அலுவலரின் பாதுகாவலில் உள்ள ஒருவரிடமிருந்து பெற்ற தகவலின் விளைவாகக் கண்டு பிடிக்கப்பட்டதாக பொருண்மை எதையும் பற்றி சாட்சியம் கொடுக்கப்படுகிறபோது, அத்தகைய தகவலில் எந்த அளவு, அத்தகவலின் மூலம் கண்டுபிடிக்கப்பட்ட பொருண்மைக்கு ஐயத்திற்கிடமின்றி சம்பந்தமுடையதாயிக்கிறதோ அந்த அளவு தகவலை அது ஒப்புதலுரையாக ஆனாலும் சரி இல்லையென்றாலும் சரி மெய்ப்பிக்கலாம். ஒரு

நபரிடமிருந்து பெறப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தின் தகவல் அடிப்படையில் ஒரு சங்கதி கண்டறிப்பட்டால் அந்த சங்கதியை பொறுத்தவரை மேற்படி தகவலானது நீதிமன்றத்தில் நிரூபணம் செய்யலாம்.

19. அவ்வாறு பாரதிய சாக் ஷ்ய அதிநியம் பிரிவு 23–ன் படி அ.சா.பொ.1 முதல் அ.சா.பொ.3 வரையிலான வழக்கு சொத்துக்களை எதிரி எடுத்து ஆஜர்படுத்தியதாக உள்ள அ.சா.ஆ.10 ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதியை அரசு தரப்பில் நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா என்பதை கூர்ந்து பரிசீலிர்க்கும் போது, ஒப்புதல் வாக்குமூலம், கைப்பற்றுதல் மகஜர் சாட்சியாக முன்னிடப்பட்ட அ.சா.5 தன் முதல் விசாரணையில், வால்பாறை காவல் நிலைய போலீசார் நான் வேலை செய்யும் நகைக்கடையில் விசாரித்து கொண்டிருந்தார்கள். அப்போது ATM கார்டு காணாமல் போய்விட்டதாகவும், அதனை அ.சா.1–க்கு ஒருவர் மாற்றி கொடுத்துவிட்டதாக போலீசார் சொன்னார்கள். என்முன்பாக போலீசார் யாரையும் விசாரிக்கவில்லை. ஒப்புதல் வாக்குமூலங்களிலும், கைப்பற்றுதல் மகஜர்களிலும் உள்ள கையொப்பம் (அ.சா.ஆ.3 மற்றும் அ.சா.ஆ.4) தன்னுடையது தான் என்றும், போலீசார் 43 ATM கார்டுகளும், தொப்பி, டேட்டா கேபிள் ஆகியவற்றை கைப்பற்றியதாக கூறினார்கள். மேற்படி பொருட்களை ஒரு நபரிடமிருந்து கைப்பற்றியதாக கூறினார்கள். அந்த நபர் ஆஜர் எதிரியாவார் என்று சாட்சியமளித்துள்ளார்.

20. மேலும், அ.சா.5 தனது குறுக்கு விசாரணையில்,

**" நான் எதற்காக கையொப்பம் செய்தேன் என்றால் நான் கடையில் இருந்த போது போலுசாரும் அ.சா.1 முருகம்மாளும், ATM கார்டை யாரோ மாற்றி கொடுத்துவிட்டார்கள் என்று அவரை தெரியுமா என்று என்னிடம் விசாரித்தார்கள். அதற்காக கையொப்பம் செய்யச் சொன்னார்கள் கையொப்பம் செய்தேன். நான் மேற்படி பொருட்களை கைப்பற்றியதை நான் நேரில் பார்க்கவில்லை என்றால் சரிதான். "** – என சாட்சியமளித்துள்ளார்.

21. மற்றொரு ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகஜர் சாட்சியான அ.சா.6 தனது சாட்சியத்தில், நான் வேலை செய்யும் கடை அருகே வைத்து காவல் ஆய்வாளர் கேட்டுக்கொண்டதின் பேரில் கையொப்பம் செய்தேன். ATM–யில் பணம் காணாமல் போனது சம்பந்தமாக

ஆய்வாளர் விசாரித்துக்கொண்டு இருந்தார். போலீசார் என்முன்பாக யாரையும் விசாரிக்கவில்லை என்றும், ஒப்புதல் வாக்குமூலங்களிலும், கைப்பற்றுதல் மகஜர்களிலும் உள்ள கையொப்பம் (அ.சா.ஆ.5 மற்றும் அ.சா.ஆ.6) தன்னுடையது தான் என்று ஒப்புக்கொண்டு, போலீசார் என் முன்பாக எந்த பொருளையும் கைப்பற்றவில்லை என்று அரசு தரப்பு வழக்கிற்கு முரணாக பிறழ்சாட்சியமளித்துள்ளார்.

22. அ.சா.பொ.1 முதல் அ.சா.பொ.3 வரையிலான வழக்கு சொத்துக்களை ஒப்புதல் வாக்குமூலம், கைப்பற்றுதல் மகஜர் சாட்சிகளான அ.சா.5 மற்றும் அ.சா.6–ன் சாட்சியத்தில், போலீசார் எங்கள் முன்பாக யாரையும் விசாரிக்கவில்லை என்றும், தடய பொருட்களை ஒரு நபரிடமிருந்து கைப்பற்றியதாக கூறினார்கள் என்று அரசு தரப்பிற்கு எதிராக அளித்துள்ள சாட்சியம் அரசு தரப்பு வழக்கிற்கு விரோதமாக உள்ளது.

23. எனவே, அ.சா.5, அ.சா.6 சாட்சியங்களிலிருந்து பாரதிய சாக்ஷ்ய அதிநியம் பிரிவு 23–ன் படி அ.சா.பொ.1 முதல் அ.சா.பொ.3 வழக்கு சொத்துக்களை அ.சா.ஆ.10 ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதியின் படி கைப்பற்றியதாக உள்ள அரசு தரப்பு வழக்கை அ.சா.5, அ.சா.6 சாட்சியங்கள் மூலம் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்யவில்லை.

24. எனவே, எதிரிக்கு எதிராக குற்றச்சாட்டை அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்யவில்லை என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**இறுதியாக,**

1. எதிரியை குற்ற சம்பவத்தோடு தொடர்புபடுத்தியோ எதிரிக்கு எதிரான குற்றச்சாட்டை நிரூபணம் செய்யும் வகையிலும், வழக்கு சான்றாவணங்களை உறுதியூட்டும் வகையிலும் அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்கள் இல்லாத நிலையில் அரசு தரப்பில் எதிரிக்கு எதிரான BNSபிரிவு 318(4)–ன் கீழ் உள்ள குற்றச்சாட்டு அரசு தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்படவில்லை என இந்நீதிமன்றம் முடிவு

MEENATCHI MURUGAN Digitally signed by MEENATCHI MURUGAN Date: 2026.04.18 12:33:40 +0530

செய்து, சந்தேகத்தின் பலனை எதிரிக்கு வழங்கி எதிரி BNSபிரிவு 318(4)–ன் கீழ் குற்றவாளி இல்லை என முடிவு செய்து, BNSS பிரிவு 271(1)–ன் கீழ் எதிரியை விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பு அளிக்கின்றது.

2. இவ்வழக்கில் தீர்ப்பின் மீது மேல்முறையீடு செய்யப்பட்டிருந்தால் மேல்முறையீட்டு நீதிமன்றத்தில் ஆஜராவதற்காக பெறப்பட்ட BNSS பிரிவு 481(1) பிணைப்பத்திரமானது இன்றைய தேதியிலிருந்து 6 மாத காலத்திற்கு அமலில் இருக்கும் என்றும் பின்னர் தானாக ரத்தாகிவிடும் என்றும் உத்தரவிடப்படுகிறது.

3. இவ்வழக்கில் P.R. No.14/2025–(அ.சா.ஆ.11 )– ல் கண்ட அ.சா.பொ.1 43 ATM கார்டுகள் , அ.சா.பொ.2 3 தொப்பிகள், அ.சா.பொ.3 4 மாஸ்க்கள்– வழக்கு சொத்துக்களை மேல் முறையீட்டுக் காலத்திற்கு பின் அழிக்கவும், மற்றும் அ.சா.ஆ.14 ல் பணம் ரூ.5,290/– க்கான புகைப்படம் – வழக்கு சொத்தையை மேல் முறையீட்டு காலத்திற்கு பின் உரிய உரிமையாளர் மனு செய்து பெற்றுக்கொள்ளுமாறு உத்தரவிடப்படுகிறது.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு இன்று 2026 –ம் ஆண்டு மார்ச் மாதம் 25–ம் நாள் என்னால் அவையறிய திறந்த இந்நீதிமன்றத்தில் பகரப்பட்டது.

MEENATCHI MURUGAN Digitally signed by MEENATCHI MURUGAN
Date: 2026.04.18 12:33:46 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர் வால்பாறை.

**அரசு தரப்பு சாட்சிகள் :–**

| | |
|---|---|
| அ.சா.1 | முருகம்மாள் |
| அ.சா.2 | விக்னேஷ் |

25.03.2026

DM Cum JM
Valparai

| | |
|---|---|
| அ.சா.3 | ராஜேஸ்குமார் |
| அ.சா.4 | முனியாண்டி |
| அ.சா.5 | ரவிக்குமார் |
| அ.சா.6 | சதீஸ்குமார் |
| அ.சா.7 | ராமசந்திரன் (காவல் ஆய்வாளர்) |

<u>அரசுதரப்பு சான்றாவணங்கள் :–</u>

1. அ.சா.ஆ. 1 – புகார் மனு
2. அ.சா.ஆ. 2 – பார்வை மகஜரிலுள்ள 1–வது சாட்சி கையொப்பம்
3. அ.சா.ஆ.3 – ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள 1–வது சாட்சி கையொப்பம்
4. அ.சா.ஆ. 4 – கைப்பற்றுதல் மகஜரில் உள்ள 1– வது சாட்சி கையொப்பம்
5. அ.சா.ஆ. 5 – ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள 2– வது சாட்சி கையொப்பம்
6. அ.சா.ஆ.6 – கைப்பற்றுதல் மகஜரில் உள்ள 2– வது சாட்சி கையொப்பம்
7. அ.சா.ஆ. 7 – முதல் தகவல் அறிக்கை
8. அ.சா.ஆ. 8 – பார்வை மகஜர்
9. அ.சா.ஆ. 9 – மாதிரி வரைபடம்
10. அ.சா.ஆ. 10 – அனுமதிக்கப்பட்ட பகுதி
11. அ.சா.ஆ. 11 – கைப்பற்றுதல் மகஜர்
12. அ.சா.ஆ.12 – 6522940124093983 என்ற எண் கொண்ட ஜெயசந்திரன் என்ற பெயர் எழுதப்பட்ட SBI ATM Card–க்கான படிவம் 91
13. அ.சா.ஆ. 13 – 43 ATM கார்டுகள், 3 தொப்பிகள், 4 மாஸ்க்கள், பணம் ரூ.5,290/– ஆகியவற்றுக்கான படிவம் 91
14. அ.சா.ஆ. 14 – ரூ.5,290/–க்கான புகைப்படம்

<u>சான்றுப் பொருட்கள்</u>:–

அ.சா.பொ.1 – 43 ATM கார்டுகள்
அ.சா.பொ.2 – 3 தொப்பிகள்
அ.சா.பொ.3 – 4 மாஸ்க்கள்

MEENATCHI MURUGAN Digitally signed by MEENATCHI MURUGAN Date: 2026.04.18 12:33:57 +0530

25.03.2026

DM Cum JM
Valparai

**<u>எதிரி தரப்பு சாட்சிகள் சான்றாவணங்கள்</u>:–** இல்லை.

**<u>குறிப்பு:–</u>**

1. எந்த சாட்சியும் மூன்று முறைக்குமேல் அழைக்கப்படவில்லை.
2. இவ்வழக்கின் முடிவு குறித்து காவல்துறைக்கு தெரிவிக்கப்பட்டது.
3. தீர்ப்பின் நகல் மாண்புமிகு தலைமை நீதித்துறை நடுவர், கோயம்புத்தூர்– அவர்களுக்கு பணிந்து சமர்பிக்கப்படுகிறது.

MEENATCHI MURUGAN Digitally signed by MEENATCHI MURUGAN Date: 2026.04.18 12:34:02 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,வால்பாறை.